**சுருக்கம்**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு பகுதிகள் மற்றும் பேரூராட்சி பகுதிகள் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் வழங்குதல் — ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4)துறை**

**அரசாணை (நிலை) எண்.97** நாள் 12/ 07/.2007

படிக்க:-

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித எண். 61294/2006/குவ2,
நாள் 22.5.2007

- - - -

**ஆணை:**

மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) அவர்கள் மானியக் கோரிக்கை எண்.34 க்கு 12.4.2007 அன்று சட்டசபையில் பதிலளிக்கும்போது கீழ்க்கண்டவாறு அறிவித்தார்:-

"தற்போது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் வழங்கும் முறையை எளிதாக்கிட அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி முறையான கட்டணங்கள் செலுத்தி, வீட்டு குடிநீர் இணைப்புகள் கோரும் அனைவருக்கும் மொத்த இணைப்பு எண்ணிக்கையில் எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றி குடிநீர் இணைப்பு வழங்கப்படும்."

2. மேற்படி அறிவிப்பின் மீதான கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து பெறப்பட்டு, நன்கு பரிசீலிக்கப்பட்டது. இந்நேர்வில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் இணைப்புகள் வழங்கும் திட்டம் 30 வருடங்களுக்கு பயன் அளிக்கும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. மேலும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வீட்டு இணைப்புகள் வழங்கும் வகையிலேயே திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும். இருப்பினும், இதுவரை குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை செயற்கையாக நிர்ணயிக்கப்பட்டு, குடிநீர் இணைப்புகள் வழங்கப்படுவதில், கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன. குடிநீர் இணைப்புகள் அதிகமாக கொடுப்பதன் மூலம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருமானம் அதிகரிக்கும். மேலும் வீடுகளுக்கே குடிநீர் இணைப்பு வழங்குவதால் குடிநீர் பெறுவதற்கு பொதுமக்கள் படும் இன்னல்கள் பெருமளவு குறையும். மேலும் வாய்ப்பு வசதி படைத்த சிலருக்கு மட்டுமே குடிநீர் இணைப்பு கிடைக்கும் என்ற எண்ணம் மாற்றப்பட வேண்டும். ஆகவே, பரிசீலனைக்குப்பின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு வீட்டுக்குடிநீர் இணைப்புகள் வழங்குவது குறித்து கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:-

1) குடிநீர் இணைப்புகளுக்கு அந்தந்த நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள கட்டண விதிகளுக்கு உட்பட்டு, எண்ணிக்கையில் எவ்வித கட்டுப்பாடும் இன்றி குடிநீர் இணைப்புகள் பெற விண்ணப்பிக்கும் அனைவருக்கும் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்.

2) விண்ணப்பங்கள் பெறப்பட்ட ஏழு நாட்களில் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்.

3) தொழில் நுட்ப காரணங்களினால் குடிநீர் இணைப்புகள் வழங்க முடியாத தெருக்கள் / பகுதிகளில் இருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டும் விண்ணப்பம் பெறப்பட்ட நாளில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் தொழில் நுட்ப காரணங்கள் சரி செய்யப்பட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்.

4) ஒவ்வொரு மாதமும் எவ்வளவு விண்ணப்பங்கள் பெறப்பட்டன, அவற்றில் எவ்வளவு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டன என்ற விவரத்தினை நகராட்சி நிர்வாக ஆணையரும் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரும் ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்து, ஆய்வு அறிக்கையினை அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், எழிலகம், சென்னை–5
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை–108
அனைத்து நகராட்சி ஆணையர்கள் ( நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
பேரூராட்சிகளின் செயல் இயக்குநர்கள் (பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை 600 005.
மாநில கணக்காயர், சென்னை 600 018.
மாநில கணக்காயர், சென்னை 600 018 (பெயர் உறையில்)
உள்ளுறை தணிக்கை அலுவலர், மாநில கணக்காய்வுத் துறைத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை 600 009.

நகல்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர். சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி2./வ/செ)துறை, சென்னை600 009
இ.கோ. / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.